பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 29 (14—9—72) வியாழன் வெளியூர்: ஆவணி 30 (15—9—72) வெள்ளி [இதழ்: 78

ஏற்றிவைத்த விளக்கு ஒளிவிட்டு எரிகிறது

"திராவிட முன்னேற்றக் கழகம் அழிக்கப்பட்டுவிடுமேயானால் அதனாலே எங்களில் தனிப்பட்ட யாருக்கும் நட்டமில்லை; சனநாயகத்துக்கு நட்டம்--மக்களாட்சிக்கு நட்டம்!

விளக்கு அணைந்தால் திருடனுக்கு இலாபம்--வீட்டுக்காரருக்குத்தான் நட்டம்!

நாங்கள் ஏற்றி வைத்த விளக்கு ஒளிவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது!"

—அறிஞர் அண்ணா

அண்ணன் பிறந்த நாள்-- அவனியெங்கும் திருநாள்

இல்லங்கள்தோறும்--நல்லவர் உள்ளங்கள்தோறும் மாமேதையின் புகழ் ஒலிக்கும்

சென்னை, செப். 14—

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து -- அதனை மாபெரும் மக்கள் சக்தியாக வளர்த்து -- தமிழ்நாட்டில் தன்னிகரில்லாத் தனிப் பெருந் தலைவராகவும் முதலமைச்சராகவும் திகழ்ந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கட்கு நாளை 64-ம் ஆண்டு பிறந்த நாளாகும்!

அண்ணா பிறந்த நாளைத் தமிழகம் நாளை கோலாகலமாகக் கொண்டாடி மகிழவிருக்கிறது; தமிழகத்தில் மட்டுமன்றி அவனியில் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அண்ணா பிறந்த நாளும் உண்டு!

கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் குடும்பத் தலைவனின் பிறந்த நாளை, வீட்டிலும் வெளியிலும் கொண்டாடி மகிழ்கின்றனர்!

கழகக் கிளைகள் -- கழகச் சார்பு அமைப்புக்கள் மட்டுமன்றிக் கட்சிச் சார்பற்ற பொதுநல அமைப்புகள் -- இலக்கிய மன்றங்களெல்லாம் அண்ணா புகழ் பாடி மகிழ்கின்றன!

நாளை முதல் தொடர்ந்து பல நாட்கள் ஆங்காங்கு அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன; நகரங்கள் -- பட்டிதொட்டிகளிலெல்லாம் கொடியேற்றல் -- படம் திறத்தல் -- குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கல் -- ஏழைகளுக்கு உணவு அளித்தல் -- கலை நிகழ்ச்சிகள் -- கருத்தரங்குகள் -- பாட்டரங்குகள் நடத்துதல் ஆகிய இன்னோரன்ன நிகழ்ச்சிகளெல்லாம் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன.

கழகத் தலைவர்கள் -- அமைச்சர் பெருமக்கள் -- மற்றும் பலதுறைச் சான்றோர்களும் விழா நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுப் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் புகழ் மாலை சூட்டவிருக்கின்றனர்.

போலீசாருக்கு மகிழ்வுச் செய்தி

வார விடுமுறை ஈட்டுப் படி உயர்வு- ஓய்வு பெற்றபின் நிலமளிப்பது பற்றி ஆய்வு

போலீசுக் கமிஷனின் எஞ்சிய பரிந்துரைகள் விரைவில் செயல்படுத்தப்படும்

காஞ்சிபுரம், செப். 14—

"தமிழ்நாடு போலீசார் இந்தியாவிலேயே மிகவும் திறமைமிக்கவர்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை; அவர்களைப் பாராட்டும் வகையில் தமிழக அரசு பதக்கங்களையும்--மானியத்தையும் அளித்து வருகிறது; தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் போலீசாருக்கு இவ்வாறு ரொக்க மானியம் அளிக்கப்படுவதில்லை.

"தமிழ்நாடு போலீசுக் கமிஷனின் 100 பரிந்துரைகளில் ஏற்கனவே 20 பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுவிட்டன; விரைவில் மற்றவையும் செயல்படுத்தப்படும்.

'இவ்விழாவில் போலீசு இன்ஸ்பெக்டர் -- ஜெனரல் அருள் வரவேற்புரை ஆற்றுகையில், ஓய்வு பெற்ற போலீசாருக்கு தலா 5 ஏக்கர் அரசு நிலம் அளிக்கவேண்டும்' என்று கோரினார்; 'போலீசாரின் வாராந்தர விடுமுறை ஈட்டுப்படியை ரூ. 1-லிருந்து ரூ. 2 ஆக உயர்த்த வேண்டும்' என்று கோரினார்.

"இந்த ஈட்டுப் படிக் கோரிக்கையைச் செயலாக்க ஒப்புக்கொள்கிறேன்; ஓய்வுபெற்ற போலீசாருக்கு நிலம் அளிக்கும் கோரிக்கைபற்றி பரிசீலிக்கப்படும்."

---முதலமைச்சர் கலைஞர்

(போலீசாருக்கு விருது வழங்கும் விழாவில்)

1,20,000பேருக்கு குடியிருப்பு மனை

குடந்தையில் முதல்வர் இன்று வழங்குகிறார்

கும்பகோணம், செப். 14—

"பேரறிஞர் அண்ணா பிறந்த நாளுக்குள் தஞ்சை மாவட்டத்தில் ஓர் இலட்சம் பேருக்கு இலவசக் குடியிருப்புமனை பட்டா வழங்கப்படும்" என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இந்தத் திட்டத்தை, 27-2-72-ம் நாளன்று திருவையாற்றில் அவர் தொடங்கிவைத்தார்.

பின்னர், திருத்துறைப்பூண்டியில் 15-6-72-ம் நாளன்று 26,150 பேருக்கு குடியிருப்புமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாகக் கும்பகோணத்தில் 1,20,000 பேருக்கு குடியிருப்பு மனைப்பட்டாக்கள் இன்று வழங்கப்படுகிறது.

அறிவிப்பு

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு நாளை நமது அலுவலகத்துக்கு விடுமுறையாகையால், 'நம்நாடு' அடுத்த இதழ் 16—9—72 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

இந்தியை எதிர்த்துச் செந்தமிழ்க் காக்கத் தீக்குளித்த...

தியாகச் செம்மல்களின் குடும்பங்களுக்கு உதவி

மாதம் ரூ. 100 வழங்கி அரசு ஆணை

சென்னை, செப். 14—

செந்தமிழுக்கு இன்னல் வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ?" என்ற புரட்சிக் கவிஞரின் வினாவுக்கு விடையளிக்கும் வகையில், வந்து புகுந்திட்ட இந்திதன்னை விரட்டியடித்திட--செந்தமிழுக்கு வந்துற்ற இன்னலைக் களைந்திடத் தங்கள் தேக்கு மரத் தேகங்களைத் தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிக் கொண்ட தீந்தமிழ்ச் செல்வங்களாம் -- எட்டுத் தியாகச் செம்மல்களின் குடும்பங்களுக்குத் திங்கள்தோறும் ரூபாய் நூறு உதவித் தொகையாக வழங்கிடத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்ற ஆண்டு தில்லையாடி வள்ளியம்மை நகர் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 'தமிழுக்காகத் தியாகம் செய்தவர்களை இந்த அரசு மறந்துவிடாது, அவர்களின் குடும்பங்களுக்கு உதவவும், அவர்கள் பிறந்த ஊரில் நினைவுச் சின்னம் எழுப்பவும் அரசு நடவடிக்கை எடுக்கும்' என்று அறிவித்தது நினைவிருக்கலாம்.

"தியாகிகளைப் பெருமைப்படுத்துவதில் தமிழக அரசு வழிகாட்டியாக இருக்கிறது; வீரத் தியாகிகள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களை மறக்கவோ -- அவர்களுக்கு உதவி செய்யவோ இந்த அரசு என்றும் தயங்கியதில்லை" என்றும் அன்று கலைஞர் குறிப்பிட்டார்.

அதன்படி, நாட்டின் விடுதலைக்காகப் போராடிய ஆயிரக்கணக்கான தியாகிகளுக்கு உதவிப் பணம் அளிக்க இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது; தீரன் வாஞ்சி ஐயர் குடும்பத்துக்கும், கட்டபொம்மன் பரம்பரைக்கும் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் மறுக்கப்பட்ட உதவி கழக ஆட்சியில் வழங்கப்பட்டது.

தேசியக் கவிஞர் நாமக்கல் கவிஞர்--பரலி சு. நெல்லையப்பர் போன்றவர்களுக்குச் சிறப்பு உதவி அளிக்கப்பட்டது.

"கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. குடும்பத்துக்கு உதவி தேவையென்று கோரிக்கை வருமானால் அது பற்றியும் அரசு பரிசீலிக்கும்" என்று அண்மையில் முதலமைச்சர் கலைஞர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது நினைவுகூரத்தக்கது.

இப்படித் தியாகிகள் எங்கிருந்தாலும் அவர்களைச் சிறப்பிக்கும் இந்த அரசு இப்பொழுது இந்தி எதிர்ப்புத் தியாகிகளின் குடும்பங்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

தீக்குளித்த தியாகிகள் எட்டுப் பேர்களின் குடும்பங்களுக்கு இந்த உதவிப் பணம் 1-4-1972 முதல் வழங்கப்படும்.

உதவி பெறும் குடும்பங்கள் விவரம் வருமாறு:—

1. அரங்கநாதன் குடும்பம்.
திருமதி மலலிகா (மனைவி), விருகம்பாக்கம், செங்கற்பட்டு மாவட்டம்
2. ஆசிரியர் வீரப்பன் குடும்பம்:
திரு. நலலப்பன் செட்டியார் (தந்தை), ஐயம்பாளையம், திருச்சி மாவட்டம்
3. கீரனூர் முத்து குடும்பம்:
டி. நடேசன் (தந்தை), சின்ன சூரியக்காடு, தஞ்சை மாவட்டம்
4. சண்முகம் குடும்பம்:
இராமையா முதலியார் (தந்தை), விராலிமலை, திருச்சி மாவட்டம்
5. சின்னச்சாமி குடும்பம்:
திருமதி கமலம் (மனைவி), கீழப்பழுவூர், திருச்சி மாவட்டம்
6. சேந்தமங்கலம் முத்து குடும்பம்:
திருமதி பார்வதி (அன்னை) சிங்கராசன்பாளையம், கோவைமாவட்டம்
7. மாணவர் தண்டபாணி குடும்பம்:
மாரியப்ப முதலியார் (தந்தை), கொளத்துப்பாளையம், கோவை மாவட்டம்
8. மாணவர் சாரங்கபாணி குடும்பம்:
கல்யாணசுந்தரம், மருத்துவஞ்சேரி, தஞ்சை மாவட்டம்

(தேவனூர் மு. சிவலிங்கம் குடும்பம் பற்றி அறிவிக்கப்படவில்லை; பின்னர் தனியே ஆணை பிறப்பிக்கப்படும்)

இந்த உதவிப் பணத்தைப் பெறுவதில் ஏதேனும் இடர்ப்பாடு இருக்குமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம் என்று அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க — அண்ணா!

உலகில் ஒரே வள்ளுவர்தான் தோன்ற முடியும்; ஒரே புத்தர்தான் — ஒரே காந்திதான் — ஒரே பெரியார் தான் தோன்ற முடியும்; அதேபோல் ஒரே அண்ணா தான் தோன்ற முடியும்; இவர்களுக்கு நிகராக இனி எவரும் தோன்ற முடியாது!

அண்ணாவுக்கு இணை அண்ணாதான்; அணுவைத் துளைத்து எழுகடலையும் புகுத்தியதுபோல் அந்த மூன்றெழுத்துக்குள் அடங்கியிருக்கும் பொருள் அளவிடற்கரிது!

அண்ணா என்றால், அதற்குப் பொருள் கொடுக்க எதிர்கால அகராதியில் பல பக்கங்கள் ஒதுக்கப்படக் கூடும். 'அண்ணா வாழ்க' என்றால், 'தமிழ் வாழ்க' என்று பொருள் — தமிழ்நாடு வாழ்க' என்று பொருள் — என்று மறைந்த கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆம் — அண்ணா என்பதே தமிழையும், தமிழ்நாட்டையும் உள்ளடக்கிய சொல்தான்! அதுமட்டுமன்று — அண்ணா என்றால், 'பேரறிஞர்' என்று பொருள் — 'அறிவு மேதை' என்று பொருள் — 'தலைசிறந்த நாவன்மை மிக்கவர்' என்று பொருள் — 'ஈடு இணையற்ற எழுத்தாளர்' என்று பொருள் — 'பெருந்தன்மை மிக்க அரசியல் தலைவர்' என்று பொருள் — சனநாயகத்தின் காவலர்' என்று பொருள் — 'தமிழ்ப் பண்பாட்டின் சின்னம்' என்று பொருள் — 'இலட்சோபலட்சம் மக்களின் இதயங்களில் குடிகொண்டுள்ள மக்கள் தலைவன்' என்று பொருள் — 'ஏழை பங்காளன்' என்று பொருள் — 'நாடாளுவதில் நாட்டுக்கு வழிகாட்டியவர்' என்று பொருள் — 'மனிதப் பண்புக்கு முதலிடம் தரும் முழுமையான மனிதர்' என்று பொருள்! இப்படி எவ்வளவோ பொருள்களை எடுத்துச் சொல்ல முடியும்!

அண்ணாவை நாம் இவ்வளவு சொல்லிப் பாராட்டுவது, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற முதுமொழியின் அடிப்படையிலன்று! அண்ணாவின் அருமை பெருமைகளை அறிந்தவர்கள் அனைவரும் நாம் சொல்வதை ஒப்புக்கொள்வர்!

அண்ணா நம்மிடையே பிறந்த காரணத்தால்தான், நாம் அவரை முற்றிலும் அறிந்துகொள்ள முடிந்தது; ஆனால், அவரை முழுமையாக உலகம் புரிந்துகொள்ள முடியாமைக்குக் காரணமும் அவர் நம்மோடு பிறந்ததுதான்!

அண்ணா மட்டும் ஐரோப்பாவிலோ — அமெரிக்காவிலோ வேறு எந்த வெளிநாட்டிலோ பிறந்திருப்பாரானால், அவரை உலகப் பெருமேதைகளில் ஒருவராக வைத்து உலகம் போற்றியிருக்கும்! குறைந்தபட்சம் வடநாட்டிலாவது அவர் பிறந்திருக்க வேண்டும் — தமிழ்நாட்டில் பிறந்ததுதான் அவர் செய்த குற்றம்!

நாம் இதனைக் கூறுவதால், 'அண்ணாவை மேதை என்று உலகம் ஒப்புக்கொள்ளவில்லை' என்பதாகப் பொருளில்லை; ஆனால், அண்ணாவைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய அளவுக்கு முழு உலகமும் தெரிந்து கொள்ளவில்லை; அண்ணாவின் புகழ் உலகின் பல பகுதிகளிலும் பரவவேண்டிய அளவுக்குப் பரவவில்லை என்பதுதான் நமது மனக் குறை!

ஆனாலும், அண்ணாவைப் பற்றி உலகம் ஒரு காலத்தில் நன்றாக உணர்ந்துகொள்ளத்தான் போகிறது! முகம்மது நபி உயிருடன் இருந்தபோது மதிக்க மறுத்தவர்கள்தானே, அவர் மறைந்தபின் அவர் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொன்னார்கள்! புத்தரின் மகிமை — அவர் இறந்த பின்னர்தான் உலகத்திற்குத் தெரிந்தது!

அரசியலில் எதிர்க் கருத்துக் கொண்டிருந்த காரணத்தால் பலரும் அண்ணாவைப் பற்றி உலகம் அறிந்துகொள்ளாதிருக்கத் திரையிட்டுப் பார்த்தார்கள்; என்றாலும் அண்ணா அவர்கள், முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதி போல் உலகத்தின் கண்களில் பட்டுவிட்டார்கள்; இறுதிக் காலத்தில்தான் அவரது பெருமை பிற பகுதிகளுக்குப் பரவத் தொடங்கியது; இவ்வளவு விரைவில் அவர் நம்மைவிட்டு மறைந்துவிடுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

அண்ணாவைப் பற்றி உலகம் புரிந்துகொள்ளாதிருந்த காலத்தில், உலகத்தைப் பற்றி அண்ணா நன்கு புரிந்து வைத்துக்கொண்டுதான் இருந்தார்! அவரை உலகம் புரிந்து கொள்ளத் தொடங்கியவுடன் அவர் மறைந்து விட்டார்!

அண்ணா ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்து நடத்தியவர் என்றாலும் அரசியல் கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது அவருடைய இதயம் என்பதை இன்னமும் பலர் புரிந்து கொள்ளாதிருக்கலாம்.

அவர் உருவாக்கிய தத்துவங்கள் — எடுத்துரைத்த அறிவுரைகள் மனித இனத்துக்கே தேவைப்படுகின்ற — எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய திருக்குறள் போன்றவையாகும்!

திருவள்ளுவரே மறுபிறவி எடுத்தாற்போல், இருபதாம் நூற்றாண்டில் நம்மிடையே தோன்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், திருக்குறள் போல் உலகம் உள்ளளவும் வாழ்வார் — அவர் காட்டிய வழி, உலகம் உய்ய உறுதுணையாக இருக்கும் என்பது நமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்!

நம் இதயக் கோயிலில் நீங்கா இடம் பெற்றுவிட்ட அண்ணா அவர்களை — அவர் பிறந்த நாளில் விழா எடுத்து வணங்கி வாழ்த்துவோமாக!

வாழ்க — அண்ணா!
ஓங்குக — அவர் புகழ்!

அரிசி — கோதுமையில் புரதச் சத்தை உயர்த்த முடியுமா?

மதுரைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

மதுரை, செப். 13—

அரிசி — கோதுமை போன்ற தானியங்கள்தான் பெரும்பாலான இந்தியர்களின் முக்கிய உணவாக இருக்கின்றன; ஆனால் ஊட்டச் சத்து வல்லுநர்கள், 'இவற்றிலே புரதச் சத்துப் போதவே போதாது' என்கின்றனர்; எனவே இந்தத் தானியங்களிலே புரதச் சத்தின் அளவை உயர்த்த முடியுமா?

மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அடங்கிய குழு ஒன்று இக்கேள்விக்கு விடை காண விழைகிறது; தாவர இயல் வழியாக இந்த விஞ்ஞானிகள் விடை காணப் போகின்றனர்; ஆனால், கலப்பின வகைகள் — செம்மையான வகைகள் தோற்றுவிப்பதற்கு இப்பொழுது வழக்கமாகக் கையாளும் தாவர வளர்ப்பு முறைகள் — கலப்பு முறைகள் ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது மதுரை விஞ்ஞானிகள் முறை.

புகழோடு வாழ்கின்றாய்!

[நெ. அ. பூபதி]

ஏழையின் சிரிப்பினிலே இறைவன் காண
ஏங்கிட்ட எம்தலைவா எங்கே சென்றாய்?
கோழையாய் வாழ்ந்திட்ட எம்மை யெல்லாம்
கொதித்தெழ செய்திட்ட கொள்கை வீர!
வாழையாய் கழகத்தை வளர்த்து விட்டு
வண்டமிழை அரியணையில் ஏற்றி வைத்து
பேழைக்குள் படுத்துறங்கச் சென்ற தேனோ?
பேரலையின் நாதத்தைக் கேட்கத் தானோ!

உடன்பிறந்த சகோதரர்கள் உடமைக் காக
உயிர்பறிக்கத் தயங்காத உலக வாழ்வில்
உடன்பிறவா அண்ணனாய் உறவு கொண்டு
ஒற்றுமையை வளர்த்திட்டாய் பாசத் தாலே
குடமிட்ட விளக்கல்ல குன்றி லிட்ட
குலவிளக்கு எமக்கெல்லாம் வழியைக் காட்டி
புடம்போட்ட தங்கம்போல ஒளிர்ந்த நீயும்
புதைபட்டுப் போனதேன் மண்ணுக் குள்ளே!

புகழ்வந்த பின்னாலே தொண்டர் தம்மை
மதிக்காமல் நடைபோடும் தலைவர் உண்டு;
புகழ்போன பின்னாலே முக்கா டிட்டு
மூலையிலே குந்தியழும் தலைவர் உண்டு;
புகழ்காக்கப் போராட்டம் தேடிச் செல்லும்
பெருந்தலைவர் நாட்டிலுண்டு; அண்ணா நீயோ!
புகழோடு வாழ்ந்திட்டாய் மறைந்த பின்னும்
புகழோடு வாழ்கின்றாய் வாழ்வாய் என்றும்

நடைபாதைகளில் ஆக்கிரமிப்பு அரசு கண்டிப்பான உத்தரவு

சென்னை நகரின் அழகு கெடாமல் இருக்க நடவடிக்கை

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

அரசு ஊழியர் — மாநகராட்சி ஊழியரிடையே உள்ள ஊதிய வேறுபாடுகளைக் குறைக்க முயற்சி

சென்னை, செப். 13—

"சென்னை நகர நடைபாதைகளில் ஆக்கிரமிப்புக்கள் அதிகமாகி விட்டதால், மக்கள் சாலைகளிலேயே நடக்க வேண்டியிருக்கிறது; 'கட்டடம் கட்டிவிட்டால் எப்படியும் அனுமதி கிடைத்துவிடும்' என்ற எண்ணத்தில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் கட்டடம் கட்டிவிடுகிறார்கள்; 'அந்த எண்ணம் தவறு' என்ற வகையில் — கட்டடம் கட்டியிருந்தாலும் — இடித்துவிட்டு ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

"நெடுஞ்சாலைகளில் எந்த வகையில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருந்தாலும் அதனை அகற்ற வேண்டுமென்று அரசு கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறது.

"சென்னை நகரின் அழகு தற்போது ஓரளவுக்குக் கெட்டுவருகிறது; அந்தக் கேடு பரவாமலிருக்க மாநகராட்சி நடவடிக்கை எடுத்து மக்களின் நன்மதிப்பைப் பெற வேண்டும்.

"மாநகராட்சிக்குச் சொந்தமான திறந்தவெளி இடங்கள் — விளையாட்டுத் திடல்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தனியார் யாருக்கும் சொந்தமாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்"

என்று கல்வி — உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

சென்னை மாநகராட்சி அலுவலர் சங்கத்தின் 52-வது ஆண்டு விழாவில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் விளையாட்டுக்கென்று தனியாகக் கட்டணம் வசூலிக்கப்பட்டும்கூட — விளையாட்டுத் தொடர்பானவைகட்கு அந்தப் பணம் பயன்படுத்தப்படவில்லை; எனவே 'விளையாட்டுக்கென வசூலிக்கப்படும் பணம் விளையாட்டுத் துறைக்குத்தான் செலவழிக்கப்பட வேண்டும்' என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

விளையாட்டுப் போட்டிகளை, கிராம — வட்ட — மாவட்ட — மாநில அளவில் நடத்தி விளையாட்டுத் திறமையை வளர்க்க அரசு திட்டமிட்டிருக்கிறது.

மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்கள் — மாநகராட்சி போன்ற உள்ளாட்சித் துறை மன்றங்கட்குத்தான் உள்ளது; எனவே, இம்மன்றங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பொதுமக்களின் நலன் கருதிச் செயல்பட வேண்டும்; தங்களது வேலைகளை மற்றவர்களின் தலையீடு இல்லாமல் நிறைவேற்றி — மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற வேண்டும்.

சென்னையைச் சிறப்பான — செழுமையான நகரமாக்கப் பொது மக்களின் ஒத்துழைப்புடன் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும்; சென்னையின் அழகு கெட்டுக் கொண்டு வருகிறது; அதற்கான சூழ்நிலையை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும்.

வெளிநாட்டினரை கவரத்தக்க அளவில் சென்னையை அழகான — வசதிமிக்க நகரமாக்க மாநகராட்சி உறுப்பினர்களும் பங்கு கொள்ள வேண்டும்.

சென்னை நகர நடைபாதைகளில் ஆக்கிரமிப்புகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன; இந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி நடைபாதைகளைச் சீராக்க அரசு உத்தரவிட்டுள்ளது; நெடுஞ்சாலைத் துறையுடன் சென்னை மாநகராட்சியும் இந்த முயற்சியை தீவிரப்படுத்த வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கும் — மாநகராட்சி ஊழியர்களுக்கும் சம்பள விகிதத்தில் அதிக வேறுபாடு இல்லாத அளவுக்குக் குறைக்கத் தக்க அளவில் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது; மற்ற மாநிலங்களில் இந்த வேறுபாடு அதிகமாக இருக்கிறது.

இரண்டாவது ஊதியக் குழுவின் சிபாரிசுகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி மாநகராட்சி ஊழியர்களுக்கும் செயல்படுத்துவதில் அரசு நியாயமான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது."

விழாவையொட்டிய மலரை மேயர் திருமதி காமாட்சி செயராமன் வெளியிட்டார்; முதல் பிரதியை நாவலர் பெற்றுக் கொண்டார்.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மேயர் பரிசுகள் வழங்கினார்.

ஆக்கி விளையாட்டுச் சங்கத்தை கமிஷனர் ஜே. வி. சச்சிதானந்த ராவ் தொடக்கி வைத்தார்.

சங்கத் தலைவர் டி. ஆர். குணசேகரன் அனைவரையும் வரவேற்றார்.

பொதுச்செயலாளர் பி. ரங்கநாதன் சங்க ஆண்டறிக்கை படித்தார்.

முன்னாள் மேயர் வி. முனுசாமி, இ. நாராயண பிள்ளை எம்.சி. ஆகியோர் விழாவில் பேசினார்கள்; சங்கத் துணைத் தலைவர் எஸ். ஏ. இராசாராம் நன்றி கூறினார்.

மு. க. முத்து ரசிகர் மன்றம்

சென்னைப் பகுதி அமைப்பாளர்கள்

தமிழக மு. க. முத்து ரசிகர் மன்றத்துக்கு சென்னை மாவட்டத்தின் பகுதி அமைப்பாளர்களாகக் கீழ்க் கண்டவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக மன்றத் தலைவர் கை. பிரம்மையா அறிவிக்கிறார்:—

வண்ணைப் பகுதி: பி. கே. மாரியப்பன்.

துறைமுகப் பகுதி: ந. இராமதாசு.

பேசின் பிரிட்ஜ் பகுதி: ஜி. என். இரத்தினம்.

பெரம்பூர் பகுதி: தி. சு. நல்லதம்பி எம்.சி.

பூங்காநகர் பகுதி: ஆசைமுத்து.

புரசைப் பகுதி: சேசாசலம்.

எழும்பூர்ப் பகுதி: இராமலிங்கம்

ஆயிரம்விளக்குப் பகுதி: முரசொலி பாலன்.

திருவல்லிக்கேணிப் பகுதி: மாதவ மனோகரன்.

மயிலைப் பகுதி: த. சாரங்கன் எம்.சி.

தியாகராயநகர்ப் பகுதி: செயராமன்.

சைதாப்பேட்டைப் பகுதி: கோ. அய்யாவு எம்.சி.

சிம்சன் பிரச்சினை: முத்தரப்புப் பேச்சுவார்த்தை — நிலைமை விளக்கம்

சென்னை, செப். 14—

சிம்சன் பிரச்சினையில் சுமூகத் தீர்வு காண்பதற்காக நேற்று அரசுத் தலைமைச் செயலகத்தில் — முதலமைச்சர் கலைஞர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையைச் சிம்சன் தொழிலாளர்கள் சங்கம் பிடிவாதமாக இருந்ததால், இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட இயலாமற் போயிற்று.

184 தொழிலாளர்கள்மீது சிம்சன் நிர்வாகம் இலாகாபூர்வமான விசாரணை நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறது; 274 பேர்கள்மீது போலீசு வழக்கு இருக்கிறது — அவர்கள் அனைவரும் தற்போது 'சஸ்பெண்டு' செய்யப்பட்டிருக்கின்றனர்; விசாரணை முடியும் வரையில் இவர்களுக்கு ஊதியம் தர ஒப்புக்கொண்டு நிர்வாகம் அறிவிப்பு ஒன்றும் வெளியிட்டிருக்கிறது.

முதலில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் முன்னிலையில், சிம்சன் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் விவாதம் நடத்தினர்; அதுபோது அமைச்சர், 'சஸ்பெண்டு ஆகியுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் முழுச் சம்பளம் கொடுக்கும்படி நிர்வாகத்துக்கு அறிவித்து அவர்களை இணங்கச் செய்ய ஏற்பாடுகள் செய்வதாகவும் — விசாரணை முடிவில் கூடுமான வரையில் பழிவாங்குதலுக்கு இடம் இல்லாமல் பார்த்துக்கொள்வதாகவும் — எனவே, அரசின் உறுதிமொழியை ஏற்று முதல்வரின் யோசனைப்படி வேலைக்குத் திரும்புமாறும் தொழிற் சங்கத் தலைவர்களிடம் சொன்னார்.

பின்னர் சிம்சன் அதிபர் சிவசைலம் — நிர்வாகப் பிரதிகள் ஆகியோரை அழைத்து அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் பேசினார்.

"தொழிற்சாலையின் நிலையான விதிகளின்படி ஒழுங்கையும் — கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட விசாரணை நடத்த வேண்டியது அவசியமே என்பதில் சிம்சன் நிர்வாகம் உறுதியாக இருந்தது" என்று தொழிலாளர் நல அமைச்சர் தெரிவித்தார்.

இதற்குப் பிறகு மீண்டும் தொழிற்சங்க நிர்வாகிகளுடன் அமைச்சர் விவாதித்தார்.

முதல்வருடன் ஆலோசனை

அதன் பிறகு சிம்சன் நிறுவன நிர்வாகத் தலைவர் ஏ. சிவசைலத்துடனும் — தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கருணாநிதி தனித் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்; அப்போது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன், தொழிலாளர் நலத் துறை செயலாளர் எம்.எம். இராசேந்திரன், தொழிலாளர் நல ஆணையர் கமலரத்தினம் ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு நிருபர்களிடம் முதலமைச்சர் கூறியதாவது:—

"சிம்சன் விவகாரத்தில் இந்த வாரம் தொடர்ந்து இரண்டு — மூன்று தடவைகளுக்குமேல் நிர்வாகத்தினருடனும் தொழிற்சங்க நிர்வாகிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள சுமார் 380 தொழிலாளர்களையும் விசாரணை இல்லாமல் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தி வருகிறார்கள்.

கலவர வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களும் — நிர்வாகத்தினரால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களும் இப்போது 'சஸ்பெண்டு' செய்யப்பட்டு — பஞ்சப்படி உட்பட பாதி ஊதியம் பெற்று வருகிறார்கள்.

நான் ஒரு யோசனையாக விசாரணை முடிந்து முடிவு ஏற்படும் வரையில் அந்த 380 பேர்களுக்கும் பஞ்சப்படி உட்பட முழு ஊதியம் தரவேண்டும் என்று சொன்னேன்.

இந்த என்னுடைய யோசனை, சிம்சனைப் பொறுத்து (தொழிலாளர்களுக்காக) ஒரு தனிச் சலுகையாகும்; வேறு எங்கும், 'சஸ்பெண்டு' செய்யப்பட்டிருப்பவர்களுக்கு முழு ஊதியம் தரப்படுவதில்லை.

என்னுடைய யோசனையை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டனர்.

உறுதிக்குப் பின்னரும்...

நிர்வாகத்தினர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ள 184 பேர்கள்மீது விசாரணை முடிந்து அவர்கள் யாரும் பழிவாங்கப்படாமல் பார்த்துக்கொள்வதற்கு ஆன பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்வதாக உறுதி அளித்திருக்கிறேன்.

நிர்வாகத்தினர் நடத்தும் இலாகா பூர்வமான விசாரணைக்குப் பிறகு — தீர்ப்பு விவரம் — சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டாலும், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சினையை முதலமைச்சர் மறுபரிசீலனை செய்து அறிவிக்கும் முடிவை ஏற்று நடைமுறைப் படுத்த நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது; விசாரணையும் விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்ட பிறகும் உடன்பாடு ஏற்படவில்லை.

உடன்பாடு ஏற்படாததற்குக் காரணம், கலவர வழக்கில் ஈடுபட்டுள்ள 249 பேரை இப்போதே வேலைக்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று தொழிற் சங்கம் வற்புறுத்துகின்ற கொள்கையால்தான்; இதனால்தான் உடன்பாடு ஏற்படவில்லை.

இத்தனைச் சலுகைகட்குப் பிறகும் உடன்பாடு ஏற்படாதது வருந்தத் தக்கதாகும்."

"போலீசு வழக்குகளைப் பொறுத்தவரையில், தனி நீதிமன்றம் அமைத்து — விசாரணையை விரைவில் முடிக்க ஏற்பாடு செய்வதாகவும் முதலமைச்சர், தொழிற் சங்கத் தலைவர்களிடம் உறுதி கூறினார்"

என்று உடனிருந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் தெரிவித்தார்.

நிர்வாகத்தினர் அறிக்கை

சிம்சன் நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், சுமூகமான தீர்வு காண்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளையும், கலவர வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் — நிர்வாகத்தினரால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள தாராளமான சலுகைகளையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியிருப்பதாவது:—

"தொழிற் சங்கங்கள் இந்தத் தாராளமான சலுகையை நிராகரித்துவிட்டு, 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ள எல்லாத் தொழிலாளர்களையும் எந்த விதமான நடவடிக்கையுமின்றி மீண்டும் வேலையில் சேர அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்துவதானது எவருக்கும் நன்மை பயப்பது ஆகாது — ஆக்கபூர்வமான முயற்சியும் அல்ல!"

வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை

மழையினால் ஓரளவு குறைவு

சென்னை, செப். 14—

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டிருந்த குடிநீர்ப் பற்றாக்குறை, அண்மையில் பெய்த மழையின் காரணமாக ஓரளவு குறைந்திருக்கிறது.

எனினும், மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அண்மையில் முதலமைச்சரால் ஒதுக்கப்பட்ட ரூ 25 இலட்சம் முழுதும் அதற்காகச் செலவிடப்படும்.

சலவையாளர் — முடிதிருத்துவோருக்கு இலவசக் கருவிகள்

பிற்பட்டோர் நலத்துறை சார்பில் அமைச்சர் இராசாராம் வழங்கினார்

உதவியைத் தக்கவிதத்தில் பயன்படுத்துமாறு அமைச்சர் என். வி. நடராசன் அறிவுரை

சென்னை, செப். 13—

ஏழை சலவைத் தொழிலாளர்கள் — முடி திருத்துபவர்கள் ஆகியோர் தொழில் நடத்துவதற்குத் தேவைப்படும் தொழில் கருவிகளைப் பிற்பட்டோர் நலத்துறை இலவசமாக வழங்குகிறது.

ஒவ்வொரு சலவைத் தொழிலாளருக்கும் ரூ 175 மதிப்புள்ள ஒரு பித்தளை இஸ்திரிபெட்டி — ஒரு மர மேசை ஆகியவை கொடுக்கப்படும்.

முடி திருத்துவோருக்கு ரூ. 75 மதிப்புள்ள முடி வெட்டும் கருவி — கத்தரிக்கோல் — கத்தி — கண்ணாடி உட்பட பல பொருட்கள் வழங்கப்படுகின்றன.

சென்னை நகரைச் சேர்ந்த 62 முடிதிருத்துபவர்கள் — 62 சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இலவசக் கருவிகள் வழங்கும் விழா நேற்று மாலை நடந்தது.

சென்னை — சைதாப்பேட்டை டாடண்டர்நகர் கலைஞர் கருணாநிதி கலைக்கூடத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் கலந்துகொண்டு இலவசத் தொழில் கருவிகளை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த முடி திருத்துவோர் — சலவையாளர் ஆகியோருக்கு வீட்டு வசதி செய்யவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், குடிசை மாற்று வாரியம் கட்டும் வீடுகளில் ஒரு குறிப்பிட்ட அளவு வீடுகளை இச்சமூகத்தினருக்கு வழங்குவது குறித்து அரசு ஆலோசிக்கும்."

என். வி. நடராசன்

விழாவில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கலந்துகொண்டு பிற்பட்டோர் நலனுக்குத் தமிழ்நாடு அரசு செய்துவரும் நன்மைகளை எடுத்துக் கூறி, 'இந்த வசதிகளைப் பிற்பட்ட வகுப்பினர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் ஆர். பண்டரிநாதன் தலைமையில் இந்த விழா நடந்தது.

விழாவில் கலந்துகொண்டவர்களை முடி திருத்துவோர் முன்னேற்றச் சங்கத் தலைவர் மு. மாசிலாமணி எம்.எல்.சி. வரவேற்றுப் பேசினார்.

சலவையாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் சி. ஆர். கோலம்பா எம்.எல்.சி, நன்றி கூறினார்.

கண்ணொளி வழங்கும் திட்டத்துக்கும் களங்கம்?

மாற்றுக் கட்சிக்காரர்களின் தவறான மனப்போக்கு

அமைச்சர் க. இராசாராம் கண்டனம்

கிருஷ்ணகிரி, செப். 9—

"ஏதோ பின்னணி வைத்துக் கொண்டு — யாருக்கோ மூக்குக் கண்ணாடி வியாபாரம் நடக்கவேண்டும் என்பதற்காகவே முதலமைச்சர் கலைஞர், கண்ணொளி வழங்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார் என்று சில 'பெரிய மனிதர்'களே கூடப் பேசினார்கள்; எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதற்கு மாறான கருத்தைச் சிலர் கற்பிக்கிறார்கள்; அவர்களது மனத்தை நாம் மாற்றவேண்டும்; உண்மை நிலையை மக்கள் உணரச் செய்தாக வேண்டும்"

என்று பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் இங்கு கூறினார்.

கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில், 'இலவசக் கண் சிகிச்சை முகாம்' நிறைவு விழா 9—9—72 அன்று நடைபெற்றது.

இந்தக் கண் சிகிச்சை முகாம் கடந்த மாதம் 28-ந் தேதி தொடங்கியது.

விழாவிற்குத் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். பத்மநாபன் தலைமை வகித்தார்; அவர் தருமபுரி மாவட்ட மக்கள் சார்பில் இரண்டாம்முறையாக முதலமைச்சரின் கண்ணொளி வழங்கும் திட்ட நிதிக்கு ரூ 65,794.50-ஐ அமைச்சர் இராசாராம் அவர்களிடம் வழங்கினார்.

ஒசூர் கோட்டாட்சித் தலைவர் கே. காளிதாஸ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரு. வி. சி. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., நகராட்சித் தலைவர் பி. திம்மராயன், சின்னசாமி எம்.எல்.ஏ., வேப்பனபள்ளி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் இராமேகவுடு, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத் தலைவர் வி. வி. இராமசாமி, சென்னையிலிருந்து வந்து சிகிச்சை அளித்த டாக்டர் குழுவின் சார்பில் டாக்டர் இராம் மோகன், சிகிச்சை பெற்றவர்கள் சார்பில் அப்பாஸ், மகளிர் மன்றச் செயலாளர் நாகரத்தினம் ஆகியோர் பேசினர்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 332 பேர்களுக்கும் மூக்குக் கண்ணாடிகளை அரிமா சங்கத் தலைவரும் — அரசாங்க வழக்கறிஞருமான எஸ். சென்னையன் நன்கொடையாக வாங்கி அளித்தார்; அவரும் இந்த விழாவில் கலந்து கொண்டு பேசினார்.

அமைச்சர் க. இராசாராம்

சிகிச்சை பெற்றவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கி அமைச்சர் இராசாராம் பேசியதாவது:—

"இந்தக் கண் சிகிச்சை முகாமில் 332 பேருக்கு அறுவைச் சிகிச்சைகள் நடந்திருக்கின்றன; 3,926 பேர் தங்கள் கண்களைக் காட்டிப் பரிசோதனை செய்து கொண்டு தக்க மருந்துகளைப் பெற்றுச்சென்றார்கள் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு எத்தகைய சிறப்பான செயல்களைச் செய்து வருகிறார் என்பதற்கு இலவசக் கண் சிகிச்சை முகாம் ஒரு சான்று.

இந்திய நாட்டின் 18 மாநிலங்களில் நமது மாநிலத்தில்தான் இதுபோன்று ஏழை எளியவர்களுக்குக் கண் ஒளி வழங்கும் திட்டம் முதன் முதலாகத் துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கண் ஒளி இழந்து தவிக்கும் 10 இலட்சம் பேர்களுக்குக் கண் ஒளி வழங்கவேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் திட்டமிட்டிருக்கிறார்.

திருவாரூர், குமாரபாளையம், கோபிசெட்டிப்பாளையம், அம்பத்தூர், கல்லக்குடி, விருத்தாசலம் நாகர்கோயில் போன்ற இடங்களிலும், தற்போது கிருஷ்ணகிரியிலும் கண் சிகிச்சை முகாம் நடைபெற்று — பல்லாயிரக் கணக்கானவர்களுக்குக் கண் ஒளி வழங்கப்பட்டிருக்கிறது; இது சாதாரண காரியமல்ல!

இதுவரை 58,000 பேர் டாக்டர்களிடம் கண்களைக் காட்டிச் சிகிச்சை செய்துகொண்டு இலவசமாக மருந்துகளையும் பெற்றுச் சென்றிருக்கிறார்கள்; இதற்கு எவ்வளவு செலவாகியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தால் புரியும்.

இந்த ஆண்டிற்குள் இலட்சம் பேருக்குக் கண் ஒளி வழங்க வேண்டும் என முதல்வர் கலைஞர் விரும்புகிறார்; அது வெற்றி பெறுவது உறுதி."

நடக்க இருப்பவை

அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

15-9-72

திருச்சி

தி.மா.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பிஷப் ஹீபர் மைதானத்தில்; தலைவர் : மு. நடராசன்; பேசுவோர் : இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் எம்.பி., ஜி. மராங்குசம் எம்.எல்.சி., கு. காமாட்சி எம்.எல்.ஏ., எம். எஸ். மணி.

உத்திரமேரூர்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பேருந்து நிலையத்தில்; தலைவர் : என். எஸ். மணி; பேசுவோர் : கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., கு. மு. இளங்கோவன், ஏ. எம். இளநேசன்.

கும்மிடிப்பூண்டி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கடை வீதியில்; தலைவர் : எஸ். கே. கண்ணன்; பேசுவோர் : புலவர் பொன்னிவளவன், தி. சு. இலட்சுமணன் எம்.பி., ஆ. கிருட்டினன், மு. கேசவன், எம். சுப்பிரமணியம், வே. சு. திருமாவளவன், பி. அமீது மற்றும் பலர்.

அருப்புக்கோட்டை

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு தேவாங்கர் கலைக் கல்லூரி அருகில்; தலைவர் : கே. வி. சீனிவாசன்; பேசுவோர் : வே. தங்கபாண்டியன் எம்.எல்.சி., ஏ. ஆர். பெருமான் எம். எல். ஏ., துரை எழில் விழியன், மு. முத்துவடுகு, பி. பி. என். நல்லதம்பி, எஸ். எஸ். கருப்பையா, எம். எஸ். அப்துல் கரீம்.

பெரியகுளம்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மூன்றுலாந்தர் அருகில்; தலைவர் : எம். கே. ஆறுமுகம்; பேசுவோர் : பி. மோகன், கே. எம். எம். மேத்தா, பி. பாண்டியன் எம்.சி., எம். பி. காமாட்சி பாண்டியன்.

சிதம்பரம்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு டவுன் ஆல் திடலில்; தலைவர் : இராம. முத்துக்குமரன்; பேசுவோர் : கே. ஏ. கிருட்டினசாமி எம்.பி., பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ., வி. வி. சாமிநாதன் எம்.பி., இரத்தின பாலகுருசாமி, கோ. துரைராசன், எம். ஏ. அபுசாலி எம்.எல்.ஏ., கு. கிருட்டினசாமி, தி. பெ. மணி, மா. சுப்பையன், புலவர் தமிழரசன், சு. கோவிந்தராசன், இரெ. சுப்பிரமணியம், துரை. பாலசுப்பிரமணியம்.

வந்தவாசி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கலைஞர் திடலில்; தலைவர் : வி. டி. அண்ணாமலை; பேசுவோர் : இரா. தர்மலிங்கம் எம்.எல்.சி., வி. இராசகோபால் எம்.எல்.ஏ., கே. ஏ. வாகாப் எம்.எல்.ஏ., டி. கே. துரை, கே. எம். ஏ. அப்துல், ஏ. தர்ம கவுண்டர் மற்றும் பலர். (பகல் 1 மணிக்கு ஏழைகட்கு உணவு அளிப்பு; இரவு 10 மணிக்கு 'புரட்சித் தலைவன்' எனும் நாடகம்.)

16-9-72

திருச்சி

தி. மா. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு பிஷப்ஹீபர் மைதானத்தில்; தலைவர் : எம். எஸ். வெங்கடாசலம்; பேசுவோர் : முதல்வர் கலைஞர்; அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.

மாயூரம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு நகரம் பூங்காவில்; தலைவர் : எஸ். இராதாகிருஷ்ணன்; பேசுவோர் : அமைச்சர் மன்னை நாராயணசாமி, கா. சுப்ரவேலு எம்.பி., இராசி குயில் வளவன், எம். ஏ. கோவிந்தராசன், பி. கிருஷ்ணமூர்த்தி, மா. கலியபெருமாள், ப. வேணு எம்.சி., பி. வீராசாமி (காலை 7 மணிக்கு, அண்ணு சிலை அருகில் பி. டி. இராசன் தலைமையில் நாவலர் உணவு வழங்குவார்.)

கோவில்பட்டி

நகர தி. மு. க. சார்பில் காலை 9.30 மணிக்கு இராமசாமி தாஸ் பூங்காவில்; தலைவர் : அழகிரி எம்.பி.; பேசுவோர் : முதல்வர் கலைஞர், அமைச்சர் சி.பி. ஆதித்தனர், மதுரை மேயர் எஸ். முத்து, செ. கந்தப்பன் எம்.எல்.ஏ. மற்றும் பலர்.

பெரம்பலூர்

நகர தி.மு.க. -- மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 6 மணிக்கு மேற்கு வானொலித் திடலில்; தலைவர் : வி. வெள்ளைச்சாமி; பேசுவோர் : அமைச்சர் என். வி. நடராசன், ஆ. துரைராசு எம்.பி., ஜே. எஸ். இராசு, மு. அட்சயகோபால், அ. காஜா முகைதின், திரு. சோமசுந்தரம் மற்றும் பலர்.

பண்ணுருட்டி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர் : கே. தட்சிணமூர்த்தி; பேசுவோர் : எம். செல்வராசு எம்.எல்.ஏ., ஓ. வி. தண்டபாணி, ஓ. மணி, ஆர். தண்டபாணி; (டி. எம். தங்கப்பன் குழுவினரின் 'இதயத்தில் அண்ணு' என்னும் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

அண்ணு பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் :

15--9--72

திருச்சி

24-வது வட்டம் அண்ணு படிப்பகம் — எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் காலை 10-மணிக்கு பூலோகநாதசாமி கோவில் தெருவில்; தலைவர் : கே. மாணிக்கம்; பெரியார் படத் திறப்பாளர் : செல்வேந்திரன்; திருவள்ளுவர் படத் திறப்பாளர் : எஸ். ஏ. ஜி. ராபி; கொடியேற்றுவோர் : வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., வி. பெரியண்ணன், கே. எல். ஆறுமுகம், கே. கணேசன், சேவியர், துரைராஜ், தி. விசயன், இரங்கசாமி.

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் காலை 11-மணிக்கு மதுரம் விளையாட்டுத் திடல் எதிர்ப்புறம்; தலைவர் : பா. பா. சு. மணி; கொடியேற்றுபவர் : ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி எம்.சி.

சென்னை 74-வது வட்டம்

வள்ளுவர் மன்றத்தின் சார்பில் காலை 9-மணிக்கு; தலைவர் : மா. செங்குட்டுவன்; துவக்குபவர் : ஜேசுதாஸ் எம்.சி.; கொடியேற்றுபவர் : கே. ஏ. கிருஷ்ணசாமி; உணவு வழங்குபவர் : மு. க. ஸ்டாலின்; பேசுவோர் : ஜம்புலிங்கம், கில்பர்ட், எம். எஸ். வடிவேலு, நாகப்பன், சிவநேசன், ரூபநாதன்.

சென்னை-மயிலைப் பகுதி

பகுதி தி. மு. க. சார்பில் காலை 8-மணிக்கு சித்திரைக்குளம் வடக்குத் தெருவில் கொடியேற்று விழா நடைபெறும்; தலைவர் : அ. சி. துளசிங்கம் எம்.சி.; கொடியேற்றுபவர் : அமைச்சர் நாவலர்; உணவு வழங்குபவர் : டி. கே. கபாலி; பேசுவோர் : புலமைப்பித்தன், கை. பிரமமையா, எஸ் வி. வேலு எம்.சி., கே. கோவிந்தசாமி எம்.சி., இரா. காசிச்சாமி எம்.சி., த. சாரங்கன் எம்.சி., அ. செல்வராசன் எம்.சி., அ. ச. சங்கரன் எம்.சி., பி. வி. ஆனந்தன் மற்றும் பலர்.

பண்ணுருட்டி

நகர தி. மு. க. சார்பில் காலை 9-மணிக்கு என். தங்கராசு எம்.சி. தலைமையில் 3,000 பேருக்கு உணவளித்தல்; நகரின் முக்கிய பகுதிகளில் கொடியேற்றுதல்; மாலை 4-மணிக்கு திருவதிகை மெயின் ரோடு பட்டித் திடலிலிருந்து ஆர். தண்டபாணி தலைமையிலும் -- ஏ. மணி, டி. முனுசாமி, என். தங்கராசு, டி. ஆர். பழனிச்சாமி, எஸ். கோவிந்தராசு ஆகியோர் முன்னிலையிலும் ஊர்வலம் புறப்படும்.

16--9--72

கரம்பக்குடி

நகர தி. மு. க.— மற்றும் துணை மன்றங்களின் சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்; அண்ணு பட்டி மன்றம்—நடுவர் : கே. வி. சுப்பையா எம்.எல்.ஏ.; துவக்கி வைப்பவர் : இர. இராமமூர்த்தி; பங்குபெறுவோர் : இரா. அரங்கசாமி, ச. பாலசுப்பிரமணியம், கரு. செல்லமுத்து, சாமி தியாகராசன், இரா. சொக்கலிங்கம், கு. ப. கண்ணன்.

போலீசு வேலையில் சேர மகளிர் காட்டிய ஆர்வம்

கோழிக்கோடு, செப். 14—

கேரளத்தைச் சேர்ந்த மாலப்புரத்தில், பெண் போலீசு வேலைக்கு 10 பேர் தேவைப்பட்டனர்; வேலை தேடித்தரும் நிலையத்தில் இதற்கான பேட்டி நடைபெற்றது.

இந்த வேலையில் சேருவதற்குப் பெண்கள் பெரும் அளவில் போட்டியிட்டனர்; 10 இடங்களுக்கு 1,000 பேர் 'கியூ' வரிசையில் நின்றனர்; 18 முதல் 28 வரை வயதுள்ளவர்களாவர் அவர்கள்.

ஆயிரம் பேர்களில் 254 பெண்களை அதிகாரிகள் தேர்ந்தெடுத்தனர்; பின்னர் இவர்களிலிருந்து 10 பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்

முதலமைச்சர் கலைஞர் அடிக்கல் நாட்டுகிறார்

கோவில்பட்டி நகரக் குடிநீர் வழங்கு திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா 16—9—72 காலை 8-30 மணிக்கு நகராட்சி தாஸ் பூங்காவில் நடைபெறும்; குடிநீர் வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன் எம்.எல்.ஏ. தலைமை வகிப்பார்; முதலமைச்சர் கலைஞர் அடிக்கல் நாட்டுவார்; அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், சி. பா. ஆதித்தனர் ஆகியோர் கலந்து கொள்வர்.

நா. கிருட்டினன் எம்.பி.

நிகழ்ச்சிகள்

செப். 15: மானாமதுரை ஊராட்சி ஒன்றியம்; 16: விருதுநகர்; 17: சிவகங்கை; 18: மதுரை; 19: மணலூர்; 20: திருச்சி -- பொன்மலை; 21: பண்ணுருட்டி; 22: தேவகோட்டை; 23; திருப்பாசசேத்தி; 24: பரமக்குடி; 25: எம். கரிசல்குளம்; 26: வெங்கட்டங்குரிச்சி (பரமக்குடி வட்டம்); 27: அதிகரை (பரமக்குடி வட்டம்).

கா. வேழவேந்தன்

நிகழ்ச்சிகள்

செப். 15: உத்திரமேரூர்; 16: கும்முடிபூண்டி--கவர்னர் நிகழ்ச்சி; 17: ஆரம்பாக்கம்; 18: கரூர்; 19: ஒசூர்; 20: பொன்னுகரம்; 24: திருவொற்றியூர்; 25: கண்ணமங்கலம்; 27: திருவள்ளூர்; 28, கும்முடிப்பூண்டி ஒன்றியம்.

தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் ரத்து?

சென்னை, செப். 14—

"தஞ்சை மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள 25 சதவிகித நெல் கொள்முதல் (லெவி ஏற்பாடு) உடனடியாகக் கைவிடப்படுகிறது; இந்த உத்தரவு உடனடியாகச் செயலுக்கு வருகிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் விளக்கியதாவது :—

"நெல் -- அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாக விலை வீழ்ச்சி ஏற்படாமல் தடுக்கவும், போதிய சேமிப்பு கையிருப்பில் இருப்பதாலும் தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் ரத்து செய்யப்படுகிறது.

'தஞ்சை நிலவுடைமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதன்மீதும் --- கொள்முதல் விரைவாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதற்கும் --- விவசாயிகளுக்குச் சீரான விலை கிடைக்கவும் -- அரிசிப் போக்குவரத்து தடையின்றி நடைபெறவும் இவ்வாறு செய்யப்படுகிறது.

"கன்னியாகுமரி மாவட்டத்திலும் கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம் -- பெரியகுளம் பகுதியிலும் நடைமுறையில் 15 சதவிகித நெல் கொள்முதல் 25 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது.

"நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் -- செங்கோட்டை -- தென்காசி ஆகிய பகுதிகளில் நடைமுறையில் உள்ள 15 சதவிகித நெல் கொள்முதல் நீடிக்கும்."

நியாய விலையில் முக்கிய உணவுப் பொருள்கள்

தமிழக அரசு நடவடிக்கைகள்

சென்னை, செப். 14—

அரிசிக்கும் -- சர்க்கரைக்கும் நியாய விலைக் கடைகள் இருப்பதுபோல், பருப்பு -- உளுந்து -- கடலை எண்ணெய் -- நல்லெண்ணெய் போன்ற சில முக்கியமான உணவுப் பொருட்களை நியாய விலையில் வழங்கத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

முதலமைச்சர் கலைஞர் அவர்களை நேற்று செய்தியாளர்கள் சந்தித்து, 'அண்மைக் காலமாகப் பருப்பு -- எண்ணெய் போன்ற உணவுப் பொருள்களின் விலை ஏறி வருகிறதே -- இதைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?' என வினவினர்.

இக்கேள்விக்குப் பதிலளிக்கையில முதலமைச்சர் குறிப்பிட்டதாவது :—

"இதுபற்றி உணவு அமைச்சரும் -- உணவுத் துறை அதிகாரிகளும் கலந்து பேசினர்.

'பருப்பு -- உளுந்து -- நல்லெண்ணெய் போன்ற சில முக்கியமான உணவுப் பொருட்களை நியாய விலையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

"முதலில் மாவட்டத் தலைநகரங்களிலும், அடுத்து பெரிய நகரங்களிலும், தொடர்ந்து படிப்படியாக மற்ற நகரங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்.

'மார்க்கெட் விலைக்கும் குறைவாக -- நியாய விலையில் இப்பொருள்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன."

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழகத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் தோழர்கள் தங்கள் தங்கள் செயலுக்காக வருத்தம் தெரிவித்தும் -- கழகத்தில் தொடர்ந்து பணியாற்ற அனுமதி அளிக்குமாறும் தொடர்ந்து தலைமைக் கழகத்திற்கு விடுத்த கோரிக்கைகளும், நேரிலும் வந்து வருத்தம் தெரிவித்து விடுத்த வேண்டுகோளும் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்ற விசாரணைக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டன.

கீழ்க்காணும் தோழர்கள் தங்கள் செயல்களுக்காக வருந்துவதை யொட்டியும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள காலத்தில் கழகத்திற்குப் புறம்பாக நடந்துகொள்ளாத நிலையையொட்டியும் அவரவர் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை இன்று முதல் ரத்து செய்யப்படுகிறது என்பதுடன், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நாளில் கழகத்தில் அவரவர் வகித்து வந்த பொறுப்புகளையே தொடர்ந்து மேற்கொண்டு பணியாற்றுவார்கள் என்பதும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்படும் தோழர்கள் :—

1. கோ. ஜெபராமன், செயலாளர், விழுப்புரம் வட்ட தி.மு.க.
2. வ. சாமிகண்ணு, துணைச் செயலாளர், விழுப்புரம் வட்ட தி.மு.க.
3. ஜே. கே. கே. அங்கப்பன், உறுப்பினர், குமாரபாளையம்.

'அறிவகம்'
சென்னை-13
12-9-1972

இரா நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.